பாடம் 7

# மிதப்பதற்குக் கடினமாயினும்

***கணக்குப் பாடம் செய்வதற்கு பீட்டருக்கு கால்குலேட்டர் தேவைப்பட்டது. அவனது நண்பன் ஜோ அவனுக்குக் கொடுத்து உதவினான். வீட்டிற்கு வந்து பையினுள் கால்குலேட்டரைத் தேடியபோது, அதைக் காணவில்லை. பீட்டருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. 'தன்னிடம் ஜோ, கால்குலேட்டரைக் கேட்கும்போது என்ன செய்வேன்!' என்று திகைத்தான். இன்றைய கதையிலும் கோடரியைத் தொலைத்துவிட்டுத் திகைத்த ஒருவரைப்பற்றிப் பார்ப்போமா?***

தீர்க்கதரிசிகளின் பள்ளியிலே ஒருநாள், வாலிபர்கள் தேவனின் நற்செய்தியைப் படித்துக் கொண்டிருந்தனர். அப்போது பள்ளிக்கு, எலிசா தீர்க்கதரிசி அவர்களைப் பார்க்க வந்தார். மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். அவர் சொல்வதையெல்லாம் மிகவும் விரும்பிக் கேட்டார்கள்.



மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதி மிகவும் சிறியதாயிருந்தது: எனவே, எலிசாவிடம் அதைப்பற்றிப் பேசினர். பெரிய கட்டடம் ஒன்றைக் கட்ட அவர் சம்மதித்தார். எனவே, ஒரு குறிப்பிட்ட நாளில் அவர்கள் யோர்தான் ஆற்றங்கரைக்குச் சென்றனர். பெரிய பெரிய மரத்துண்டுகளை வெட்டினர். எலிசாவும் அவர்களுடன் இருந்தார். வாலிபன் ஒருவன் மற்றொருவனிடம் கோடரி ஒன்றை இரவலாக வாங்கியிருந்தான். அவனும் மிகுந்த மகிழ்ச்சியோடு புதிய கட்டடம் கட்டுவதற்காக ஆர்வமாக மரங்களை வெட்டிக் கொண்டிருந்தான். எலிசாவும் அவர்களுடன் இணைந்து உற்சாகமாய் வேலைசெய்தவாறு தேவனுடைய அன்பையும் சொல்லிக்கொண்டிருந்தார்.

கடன்வாங்கிய கோடரியை வைத்து, வேலைசெய்து கொண்டிருந்த வாலிபனின் கோடரி ஆற்றினுள் விழுந்துவிட்டது. 'தொம்' என விழுந்த கோடரியின் ஓசை எல்லாருடைய வேலையையும் நிறுத்தியது. "ஐயோ!

**மனன வசனம்**

**கேளுங்கள்; அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள்; அப்பொழுது கண்டடைவீர்கள்.**

**மத்தேயு 7:7.**

என்னுடைய கோடரி தண்ணீரில் விழுந்துவிட்டதே! என் ஆண்டவனே! அக்கோடரி இரவலாக வாங்கப்பட்டதல்லவா; நான் அதை திருப்பிக்கொடுக்க வேண்டுமே! புதிதாக வாங்கிக் கொடுக்க என்னிடம் பணமும் இல்லை'' என்று புலம்பினான்.

யாவரும் 'திரு திரு'வென விழித்துக் கொண்டிருந்தனர்; எலிசா கோடரி விழுந்த இடம் நோக்கி விரைந்தார். ஆனால் கோடரி கண்ணுக்குத் தெரியவில்லை. ''தண்ணீருக்குள் எங்கு விழுந்தது?'' என்று கேட்டார். விழுந்த இடத்தை அந்த வாலிபன் காட்டினான்.

எலிசா அந்தப் பகுதியைப் பார்த்தார். பின்னர் ஒரு சிறிய கிளையை வெட்டி, கோடரி விழுந்ததாகக் காட்டப்பட்ட இடத்தை நோக்கி வீசினார்.

இப்போது நீரினுள் மூழ்கியிருந்த கோடரி மெல்ல தண்ணீருக்கு மேலாக மிதந்தது.

மாணவர்கள்அதைக் கண்டவுடன் நிம்மதியான ஒரு பெருமூச்சை விட்டனர். யாவருக்கும் மிகுந்த சந்தோஷம்.

யாவரையும் விட கோடரி இரவலாக வாங்கியிருந்த அந்த வாலிபனுக்குத் தாங்கமுடியாத அளவு சந்தோஷம். ஏனெனில் சற்று நேரத்திற்கு முன்னர் வரையிலும் என்னசெய்வது என்று கலங்கிக்கொண்டிருந்தான். இப்போது மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தவாறு தேவனைத் துதித்தான். இரும்புக் கோடரியும் தண்ணீரில் மிதக்குமா என்ன? ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அவனுள் பொங்கியது.

தேவன் தம்முடைய தீர்க்கதரிசி எலிசாவைக்கொண்டு இந்த அற்புதத்தைச்செய்தார்.

அது மாணவர்களின் மனதில்



## செய்தி

**தேவன் உலகிலுள்ள ஒவ்வொருவருடைய பிரச்சனைகளிலும் அக்கறை காட்டுகிறார்.**

ஆழமாகப் பதிந்தது.

அந்த வாலிபன் கோடரியை இழந்த நிகழ்ச்சியின் மூலம் தேவன் ஓர் அற்புத நிகழ்வை அங்கு நிகழ்த்தினார். வாலிபனின் மேலே தமக்கு உள்ள கரிசனையை வெளிப்படுத்தினார்.

வாலிபர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் தங்கள் விடுதிக்கு வந்தார்கள்.

தேவனின் அற்புதமான செயலைச் சொல்லிச் சொல்லி வியந்தனர்.

என் செல்லமே! தேவன் உலகிலுள்ள அனைவர் மீதும் அக்கறை யோடிருக்கிறார்.

நாம் அவரை நம்பக் கற்றுக்கொண்டால் நம் வாழ்விலே என்றும் இன்பமே.

செய்வீர்களா? நம்புங்கள். அது நல்லது.

***செய்முறை:*** **இங்கே கொடுக்கப்பட்டுள்ள படங்களின் பெயர்களைக் கோட்டில் எழுது. தேவன் உலகிலுள்ள ஒவ்வொருவர்மேலும் எப்படி இருக்கிறார் என்பதைக் கோட்டில் எழுது. பாடத்தை வாசித்து, பதில் எழுது.**




1. ______________________



2. ______________________

## புதிர் 7



3. ______________________



4. ______________________



5. ______________________

______________________________________________